# பிரதமர் மக்கள்-நிதி திட்டம்

**எனது வங்கி கணக்கு, எனது வாழ்க்கை கணக்கு**




# நிதியியல் கல்வியறிவு வழிகாட்டி

## மாநில வங்கியாளர்கள் குழுமம், தமிழ்நாடு

**(ஒருங்கிணைப்பாளர்: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி)**

# ஒரு வங்கி கணக்கு, நிறைய நன்மைகள்

மேலாளர் : வணக்கம், ஐயா

கோபால் : வணக்கம் மேனஜர் சார், தயவு செய்து உள்ளே வந்து அமருங்கள்

மேலாளர் : உங்களுக்கு தெரியுமா? நமது ஊரில் சேமிப்பு கணக்கு தொடங்குவதற்கான சிறப்பு முகாம் நடத்தப்படுகிறது. நான் உங்களை அங்கு பார்க்கவில்லையே? தாங்கள் ஏன் வங்கி கணக்கு துவங்க வில்லையா?

கோபால் : என்ன கணக்கு சார்? தினசரி செலவை பார்த்தாலே எனக்கு சேமிப்பு செய்வதற்கு மிகவும் கடினமாக இருக்கிறது.

மேலாளர் : ஆனால் கட்டாயம் தாங்கள் சேமிக்க வேண்டும். சரி நீங்கள் பாக்கு, சிகரெட், புகையிலை சாப்பிடும் பழக்கம் உண்டா?

கோபால் : எனக்கு சிகரெட் பிடிக்கும் பழக்கம் கிடையாது. ஆனால் பாக்கு போடும் பழக்கம் உள்ளது.

மேலாளர் : சரி சொல்லுங்கள் , நாளொன்றுக்கு எத்தனை பாக்கு சாப்பிடுவீர்கள் ?

கோபால் : நாளொன்றுக்கு சுமாராக 4-5 பாக்கு சாப்பிடுவேன்.

கோபால் மனைவி : 4-5 ஆ!!. இல்லை, இல்லை, இவர் சுமார் 8-10 பாக்கு சாப்பிடுவார்.

மேலாளர் : ஒரு பாக்கின் விலை என்ன?

கோபால் : விலை வாசி உயர்வின் காரணமாக ஒரு பாக்கின் விலை அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. நான் ரூபாய் 2/- க்கு ஒரு பாக்கு வாங்குவேன்

மேலாளர் : அதாவது நீங்கள் சுமாராக ஒரு நாளைக்கு 10 ரூபாய் பாக்கிற்காக செலவு செய்கிறீர்கள். தங்கள் பாக்கு சாப்பிடுவதை நிறுத்திக்கொண்டால் தங்களால் 10 ரூபாய் நாளொன்றுக்கு சேமிக்க முடியும்.

கோபால் மனைவி : சார் இவர் சில நேரத்தில் நிறைய பாக்கு சாப்பிடுவார்

மேலாளர் : தாங்கள் ரூபாய் 10 நாளொன்றுக்கு சேமித்தால் தங்களால் மாதத்திற்கு ரூபாய் 300 ம் , ஒரு வருடத்திற்க்கு ரூபாய் 3600 ம் சேமிக்கலாம் அல்லவா?

கோபால் : ரூபாய் 3600/- ஒரு வருடத்திற்கா!!!

மேலாளர் : ஆமாம். நீங்கள் ஒரு சேமிப்பு கணக்கை வங்கியில் தொடங்கி அப்பணத்தை

சேமிப்பு கணக்கில் வைத்தால் வங்கி அதற்கு வட்டியும் கொடுக்கும்.

கோபால் மனைவி : ஓகோ , இவ்வளவு பணம் சேமிக்க முடியுமா!! அதற்கு மேலும் வட்டியா? அப்படி என்றால் எங்கள் பணம் பன் மடங்கு பெருகுமே இந்த பணத்தை வைத்து நாங்கள் என் மகள் கமலிக்கு ஒரு தையல் இயந்திரம் வாங்கி விடலாமே.

மேலாளர் : ஒரு வேளை யாருக்கேனும் உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு திடீரென்று உடல் நிலை சரில்லையென்றால் பணத்திற்கு என்ன செய்வீர்கள்?

கோபால் : நாங்கள் கொஞ்சம் பணம் சேமித்து வைத்திருக்கிறோம். மேலும், பணம் தேவைப்பட்டால் அது போதாது என்றாள் கந்து வட்டிக்கரரிடம் கடன் வாங்கி கொள்வோம்.

மேலாளர் : அது சரி மீதமாகும் பணத்தை எங்கு வைப்பீர்கள்?

கோபால் : சேமிக்கும் பணத்தை ஏதாவது பானையிலோ அல்லது வீட்டில் உள்ள துணிகளுக்கு இடையிலோ வைப்போம்.

கோபால் மனைவி : நான் ஏதேனும் துணியில் முடிந்து சமையல் அறையில் உள்ள ஏதேனும் பாத்திரத்தில் மறைத்து வைப்பேன்.

மேலாளர் : அப்படி செய்யும் போது ஒருவேளை பணம் தொலைந்து போவதற்கோ, திருடுபோவதற்கோ அல்லது எலி சேதப்படுத்துவதற்கோ வாய்ப்பு இருக்கிறது தெரியுமா?.

கோபால் : நீங்கள் சொல்வது சரிதான். ஒரு சமயம் இந்த கிராமத்தில் மழையினால் வெள்ளம் ஏற்பட்டு என்னுடைய பொருட்களோடு சேர்ந்து என்னுடைய பணமும் அடித்து செல்லப்பட்டது.

மேலாளர் : நீங்கள் பணத்தை வங்கியில் சேமித்து வைத்திருந்தால் பத்திரமாக இருப்பதோடு மட்டுமில்லாமல் தங்களுக்கு தேவைப்படும் பொழுது உபயோகமாக இருக்கும்.

கோபால் : ஆனால் வங்கி கூட மழையால் பாதிக்கப்பட்டதே.?

மேலாளர் : அனைத்து கணக்கு விவரங்கள் முக்கிய கணினியில் பாதுகாப்பான இருக்கின்றன. எனவே உங்கள் பணம் எப்போதும் பாதுகாப்பாக இருக்கும் மேலும் நீங்கள் எங்கும், எப்போதும் அதை திரும்ப எடுத்துக் கொள்ளலாம்.

மேலாளர் : இப்போது, நான் உங்களுக்கு ஒரு கணக்கு தொடங்குவதின் நன்மைகளை பற்றி சொல்கிறேன். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் (MGNREGA), மாணவர்ககளுக்கான கல்வி உதவி தொகை, அரசு திட்டங்களுக்கான, அரசாங்கத்தின் வரி முதலியன வங்கியில் நேரடியாக டெபாசிட் செய்யப்படும். ஆகவே ஒரு வங்கி கணக்கு துவங்குவது என்பது மிகவும் அவசியமானது.

மேலாளர் : மேலும் தங்களுக்கு ஆதார் அட்டை இருந்தால் அதை உங்கள் வங்கி கணக்கில் இணைத்துக்கொண்டால் எந்த குறைபாடும் இல்லாமல் அனைத்து அரசு உதவிகளும் உங்கள் கணக்கில் நேரடியாக டெபாசிட் செய்யப்படும்.

கோபால் : அப்படி இருந்தால் எந்த மோசடியும் இல்லாமல் அரசு உதவிகள் எளிதாக கிடைக்கும்.

மேலாளர் : மேலும், நீங்கள் மற்ற கிராமங்களில் அல்லது நகரங்களில் வாழும் உங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு பணம் அனுப்ப முடியும். அதை அவர்கள் அன்றய தினமே பெற்று விட முடியும். அதை அவர்கள் எப்பொழுது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். ஆகவே இப்போது சொல்லுங்கள் ஒரு கணக்கு தொடங்குவது முக்கியமா இல்லையா?

கோபால் : ஆமாம் சார். நான் எப்படி கணக்கு துவங்குவது? என்று சொல்லுங்கள்.

மேலாளர் : ஒரு கணக்கை திறக்க ஒரு புகைப்படத்துடன் சேர்த்து அடையாள அட்டை மற்றும் முகவரி சான்று தேவை.. குடும்ப அட்டை, மின்சார கட்டண ரசீது, வாக்காளர் அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்ட அட்டை (MGNREGA) ஆதார் அட்டை போன்ற ஏதாவது ஒரு சான்று தேவைப்படும்.

கோபால் : சார், இந்த ஆவணங்கள் என்னிடம் இருக்கிறது, நாளை வந்து ஒரு வங்கி கணக்கை தொடங்குகிறேன்

கோபால் மனைவி : ஏன் நீங்கள் நாளை திறக்க வேண்டும், இன்றே தொடங்குங்கள். மேலும் பாக்கு சாப்பிடுவதை இன்றே நிறுத்துங்கள்.

கிசான் : வணக்கம் கோபால் அண்ணா. தங்கள் வீட்டில் விருந்தினர் இருக்கிறாரோ?

கோபால் : வணக்கம் கிசான் தம்பி. தயவு செய்து உள்ளே வா. இவர் எங்கள் வங்கி மேலாளர். இவர் ஒரு வங்கி கணக்கின் நன்மைகள் பற்றி எங்களுக்கு விளக்கினார், மற்றும் இவர் எங்களுக்கு ஒரு கணக்கு தொடங்க உதவுகிறார். நீயும் ஒரு வங்கி கணக்கு கட்டாயம் திறக்க வேண்டும்.

கோபால் மனைவி : சார், இவர் என்னுடைய சகோதரர். இவர் அருகில் உள்ள கிராமத்தில் வசிக்கிறார். ஆனால் இவரது கிராமத்தில் எந்த ஒரு வங்கியும் இல்லை. இவர் ஒரு கணக்கை திறக்க ஏதாவது சாத்தியம் உள்ளதா?

மேலாளர் : ஏன் இல்லை? இவர் ஒரு வங்கி கணக்கை திறக்க முடியும். எங்கள் வங்கி வர்த்தக தொடர்பாளர் இவருடைய கிராமத்திற்கு கையடக்க வங்கி இயந்திரம் கொண்டு வந்து கணக்கை தொடங்கி, சேமிப்பு பணத்தை பெற்றுக்கொண்டு அதற்கான இயந்திரத்தின் மூலம் வரும் அச்சிடப்பட்ட ரசீதை தருவார்.

கிசான் : பணம் கணக்கில் இருந்து திரும்ப பெறவேண்டும் என்றால்,அவரே கொடுப்பாரா??

மேலாளர் : அவர் உங்கள் கைவிரல் ரேகையை அந்த இயந்திரத்தில் வைத்து, உங்களுடைய அடையாளத்தை சரி பார்த்த பின்பு உங்களுடைய பணத்தை கணக்கில் இயந்திர அச்சிடப்பட்ட ரசீதுடன் சேர்த்து உங்கள் கணக்கில் இருந்து பணம் கொடுப்பார்.

கிசான் : முடியாது. நான் என் கைவிரல் ரேகையை வைக்க மாட்டேன்.

மேலாளர் : பயப்பட வேண்டாம். பணம் கொடுப்பவர் உங்களுடைய கைவிரல் ரேகையை அச்சிட மாட்டார். ஒவ்வொரு மனிதனின் பெருவிரல் அமைப்பு மற்றவரிமிருந்து வேறுபட்டது. இயந்திரம் வங்கி கணக்கின் உரிமையாளாரின் கைநாட்டா என்று கண்டறியும். தவிர, வங்கி தங்களுக்கு ஒரு Rupay டெபிட் கார்டு வழங்கும் அதை வைத்து எந்த ஏடிஎம் லும் இருந்து பணம் திரும்ப எடுக்க முடியும். மேலும் இந்த Rupay டெபிட் கார்டுக்கு இலவசமகா, ஒரு லட்சம் ரூபாய்க்கான விபத்து காப்பீடு வழங்கப்படும்

கோபால் : பணத்தை வங்கி வர்த்தக தொடர்பாளர் ஏமாற்ற வாய்ப்பு இருக்கிறதா?

மேலாளர் : இல்லவே இல்லை. வங்கி தங்களுடைய கணக்கின் நடவடிக்கைகளுக்கு ரசீது கொடுக்கும். மேலும் தங்களுக்கு பாஸ் புத்தகம் கொடுக்கும் அதில் விரிவான உங்களுடைய வங்கி வரவு செலவு அச்சிடப்பட்டு தரப்படும். கணக்கீட்கு உங்களுடைய வாரிசாக யருவாது ஒருவரை நியமனம் செய்யலாம். உங்களுடைய கணக்கில் உங்கள் மனைவி மற்றும் குழந்தை பெயர் சேர்க்க முடியும்.

மேலாளர் : பின்னர், அவசர காலங்களில் உங்கள் கணக்கில் பணம் இல்லையென்றாலும் வங்கி உங்களுக்கு கடன் தரும். மேலும் நீங்கள் அந்த கடனை தவறாது செலுத்துவதன் மூலம் நீங்கள் ரூபாய் 2000 முதல் ரூபாய் 5000 வரை கடனாக பெற முடியும். இதையே மிகைபற்று (OVER DRAFT) என்று அழைக்கப்படும்

மேலாளர் : இந்த வசதி மூலம், நீங்கள் கடன் பெற ஒரு வட்டி கடைக்காரரிடம் செல்ல வேண்டிய அவசியமில்லை.

கிசான் : சார், என்னால் நம்ப முடியவில்லை

மேலாளர் : வங்கி கணக்கு ஆரம்பிக்கும் போது மேலும் ஒரு நன்மை கிடைக்கிறது.உங்களது பண பரிவர்த்னை சிறப்பாக இருக்கும் போது வங்கியானது மிகைப்பற்று வழங்குகிறது.

கோபால் : ஆனால் வங்கி இந்த கடனுக்கு வட்டி வசூலிக்குமா?

மேலாளர் : ஆமாம், வங்கி இந்த கடனுக்கு வட்டி வசூலிக்கும் ஆனால் வட்டி விகிதம் மிக குறைவாக இருக்கும்.

கிசான் : வங்கி, வட்டி கடைக்கராரை விட அதிகமாக வட்டி வசூலிக்கிறது என்று நான் கேள்விப்பட்டேன்? இது உண்மையா?

| | | |
|---|---|---|
| மேலாளர் | : | தவறு யாரோ இதை பற்றி குழப்பி வருகிறார்கள். பாருங்கள் வங்கி ஒரு வருடத்திற்கு 12% வசூலிக்கும், அதாவது ஒரு மாதத்திற்கு 1% அதேசமயம் வட்டி கடைக்காரர் மாதத்திற்கு சுமார் 5% வசூலிப்பார். இப்போது சொல்லுங்கள் வட்டி கடைகாரர் வங்கியை விட எவ்வளவு அதிகமாக வாங்குகிறார் என்று ? |
| கிசான் | : | ஓ! கடவுளே! வட்டி கடைக்காரர் எங்களை எந்த அளவுக்கு ஏமாற்றுக்கிறார் என்று இப்போது புரிகிறது. |
| கோபால் | : | வட்டி விகிதம் குறைவு என்றால் நாங்கள் ஏன் கடன் வாங்க மற்றவரிடம் போக வேண்டும்? நாங்கள் வங்கியில் இருந்தே கடன் பெற்று கொள்ள முடியுமே. சார், தயவு செய்து எங்களுக்கு எந்தெந்த காரணங்களுக்காக வங்கி எங்களுக்கு கடன் கொடுக்கும்? என்று சொல்லுங்கள் |
| மேலாளர் | : | வங்கி நிறைய திட்டங்களை வைத்துள்ளது |
| மேலாளர் | : | வங்கியானது, விதைகள், உரங்கள் மற்றும் விவசாய பூச்சி கொல்லிகள் ஆகியவற்றுக்கு கடன் வழங்குகிறது. இதை தவிர டிராக்டர் மற்றும் பிற உபகரணங்கள் வாங்க கடன் வழங்குகிறது. அது மட்டுமல்ல, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு மற்றும் பல்வேறு பிற தொழில்களுக்கு கடன் வழங்குகிறது. |
| மேலாளர் | : | மேலும் வங்கியானது, குழந்தைகளுக்கான கல்வி கடன், வீடு கட்டுவதற்கும், வாங்குவதற்கும் வழங்குகிறது |
| மனைவி | : | அப்படியென்றால் என் மகளுக்கு தையல் இயந்திரம் வாங்க கொஞ்சம் பணம் தேவைப்படும் போது, நான் ஒரு வங்கியில் கடன் பெற முடியுமா? |
| மேலாளர் | : | ஆம், நிச்சயமாக. ஆனால் உங்கள் மகளுக்கு நல்ல கல்வி கொடுங்கள், இதற்கு வங்கி உதவும். மேலும் கிசான் கடன் அட்டை மற்றும் பொது கடன் அட்டை போன்ற மற்ற வசதிகளை வங்கி வழங்கும். |
| கிசான் | : | இந்த அட்டைகள் எதற்காக? அது எப்படி நமக்கு உதவ முடியும்? |
| மேலாளர் | : | இந்த அட்டைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நீங்கள் அண்டை நகரத்திற்கு கடைக்கு வெளியே செல்லும் போது, பணத்தை பையில் எடுத்து செல்வது பாதுகாப்பானதாக இருக்காது. கற்பனை செய்து பாருங்கள், ஒருவேளை பணம் தொலைந்தாலோ அல்லது களவு செய்யப்பட்டாலோ என்றால் அது ஒரு தொந்தரவாக சூழ்நிலையாக முடியும். |
| கிசான் | : | நீங்கள் சொல்வது சரி தான் சார். பணம் திருட்டு போய் விடுமோ என்ற பயம் எப்போதும் இருக்கும் |
| மேலாளர் | : | நீங்கள் இந்த அட்டைகளை பயன்படுத்தி எந்த வங்கி ஏடிஎம்லும்(ATM) பணம் எடுக்க முடியும். |

கோபால் : சார் எங்களுக்கு எப்படி ஏடிஎம் (ATM) இயந்திரத்தை பயன்படுத்துவது என்பது தெரியாது?

மேலாளர் : ஓ, அது மிகவும் எளிது. உங்கள் அட்டைக்கு ஒரு எண் ஒதுக்கப்பட்டிருக்கும். நீங்கள் அந்த ஒதுக்கப்பட்ட எண்ணுக்குப் பதிலாக சொந்த ரகசிய 4 இலக்க எண்ணை நீங்கள் மாற்றிக் கொள்ளவும்.யாருக்கும் இந்த 4 இலக்க எண் வெளியிட வேண்டாம்.

கோபால் : அடுத்து என்ன செய்ய வேண்டும்?

மேலாளர் : நீங்கள் ஏடிஎம் இயந்திரத்தில் இந்த அட்டையை சொருகும் போது, இயந்திரம் உங்கள் இரகசிய எண் கேட்கும்.எண் சரியாக இருந்தால் நீங்கள் பணம் எடுத்தல், பணம் இருப்பு சரி பார்த்தல் ,ரகசிய எண் மாற்றுதல் போன்ற செயல்களை செய்யலாம். நீங்கள் பணம் எடுப்பதாக இருந்தால்,தேவைப்படும் தொகையை keyboard மூலம் டைப் செய்து பணம் எடுத்து கொள்ளலாம்.அதோடு சேர்த்து தங்கள் கணக்கில் எவ்வளவு பணம் இருப்பு உள்ளது என்பதை ரசீது மூலம் தெரிந்து கொள்ளலாம்

கிசான் : ஆஹா, இது ரொம்ப வசதியானது. இந்த அட்டை மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என புரிகிறது.

மேலாளர் : மேலும் இந்த அட்டைக்கு பிற நன்மைகள் இருக்கிறது. நீங்கள் நேரடியாக இந்த அட்டையை பயன்படுத்தி கடைகளில் இருந்து பொருட்களை வாங்க முடியும். உங்கள் கணக்கில் இருந்து தானாக பணம் கழிக்கப்பட்டு உங்களுக்கு கடைக்காரர் பொருளை தருவார்.

கோபால் : ஆஹா, அதாவது பணம் கையில் இல்லாமலே பொருட்களை வாங்க முடியும் அல்லவா?

கிசான் : இந்த உண்மையில் ஒரு நல்ல யோசனை. ஐயா, மேலும் சந்தையில் இருந்து தேய்ந்துபோன/ அழுக்கடைந்த/ கிழிந்த ரூபாய் நோட்டுகள் கிடைக்கின்றன. இதை நாம் கடைகாரரிடம் கொடுத்தால் அவர்கள் அதை வாங்குவது இல்லை. எனவே நாங்கள் பணம் மாற்றும் கடைக்காரர்கள் மூலம் பாதி விலைக்கு கிழிந்த ரூபாய் நோட்டுக்களை மாற்ற வேண்டியுள்ளது.

கோபால் : ஆம். சில்லறை மாற்றுவதும் கடினமாகவே உள்ளது

மேலாளர் : அப்படியா? வங்கி தேய்ந்துபோன/ அழுக்கடைந்த/ கிழிந்த நோட்டுக்களை பரிமாறி கொள்ளும் வசதி வழங்குகிறது. மேலும் சில்லறை பரிமாறி கொள்ளும் சேவையும் வழங்குகிறது.

கோபால் : அப்படியா? எங்களுக்கு இது பெரும் கவலையாக இருந்தது.

மேலாளர் : மேலும் பல வேலைகளை நீங்கள் வங்கிக்கு வராமலே செய்ய முடியும். உங்களிடம் மொபைல் போன் உள்ளதா?

கிசான் : ஆமாம் சார், என்னிடம் ஒரு மொபைல் போன் உள்ளது.

மேலாளர் : நீங்கள் இந்த மொபைல் போனை பயன்படுத்தி நிறைய வேலைகளை வங்கிக்கு வராமலே செய்ய முடியும்.

கோபால் : எப்படி சாத்தியம் சார்?

மேலாளர்: : இது யுஎஸ்எஸ்டி (USSD) வசதி அழைக்கப்படுகிறது. உங்கள் மொபைல் எண்ணை உங்கள் கணக்கில் நீங்கள் ஒரு ஏடிஎம்(ATM) சென்று அல்லது வங்கி கிளை மூலம் இணைக்க முடியும். உங்கள் மொபைலில் இருந்து குறுந்செய்தி (SMS) அனுப்புவதன் மூலம் உங்கள் கணக்கின் இருப்பு தொகை மினி அறிக்கை போன்றவை பெறலாம். மேலும் இந்த வசதி மூலம் உங்கள் உறவினர்கள், நண்பர்க ள் கணக்கிற்கு பணம் அனுப்பலாம்.

கோபால் : ஐயா, இது எங்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். எனினும், எங்களிடம் விலை உயர்ந்த அல்லது உயர் ரக மொபைல் போன் இல்லையே ?

மேலாளர் : இந்த வசதி எந்த மொபைல் போனில் இருந்தும்பெறலாம்

கிசான் : சார், இந்த வகை பரிவர்த்தனைகளால் எங்கள் பணத்தை இழக்கும் ஆபத்து உள்ளதா?

மேலாளர் : இதைப்பற்றி கவலைப்பட வேண்டாம் இது முற்றிலும் பாதுகாப்பானது,

மேலாளர் : வங்கியானது எப்போதும் உங்கள் வாழ்வு சிறப்பு பெறவும் முன்னேறவும் அயராது பணி ஆற்றி வருகிறது. நான் உங்களுக்கு மற்றொரு உதாரணம் தருகிறேன். வங்கி பல்வேறு இடங்களில் நிதி தொடர்பான கல்வி மற்றும் ஆலோசனை மையங்கள் திறந்துள்ளது.

கோபால் : அது என்ன?

மேலாளர் : இந்த மையத்தில் வங்கியானது விவசாயிகளுக்கு தரமான விதைகள், உரங்கள், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பாசன வசதிகள் போன்ற தகவல்களையும் மேலும் சந்தைகள் மற்றும் மண்டிகள் பற்றிய ஆலோசனைகளை வழங்குகிறது.


கிசான் : நாங்கள் இந்த சேவைகளை பெறுவதற்கு ஏதாவது பணம் செலுத்த வேண்டுமா?

மேலாளர் : இல்லவே இல்லை. இந்த சேவை இலவசமாக தரப்படும்

கிசான் : மிக்க நன்று. வங்கி எங்களுக்கு நிறைய உதவிகளை செய்கிறது

மேலாளர் : நீங்கள் இந்த தகவலை உங்கள் நண்பர்களுடன் பகிர்ந்து வங்கிக்கும் உங்கள் நண்பர்களுக்கும் உதவ முடியும்., உங்களுடன் சேர்ந்து அவர்களையும் குறைந்தது ஒவ்வொரு வீட்டுக்கு ஒரு வங்கி கணக்கை திறக்க கேட்டுக்கொள்ளுங்கள்

| | | |
|---|---|---|
| கிசான் | : | நிச்சயமாக நாங்கள் எங்கள் கிராமத்தில் உள்ள அனைவருக்கும் இந்த தகவலை பகிர்ந்து மற்றும் அனைவரிடமும் வங்கி கணக்கு தொடங்க கேட்டுக்கொள்வோம். |
| மேலாளர் | : | இப்போது நான் புறப்படுகிறேன். வங்கிக்கு வாருங்கள் |
| கிசான் | : | நிச்சயமாக சார், நீங்கள் எங்கள் நலனுக்காக கூறி உள்ளீர்கள், நாங்கள் கண்டிப்பாக வருவோம். |
| கோபால் | : | இந்த தகவலை எங்களுக்கு வழங்கியதற்கு மிக்க நன்றி சார் |
| கோபால் மனைவி | : | ஆமாம், எங்களது வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும்,எங்கள் வாழ்க்கை மலரும்,எங்கள் குழந்தைகள் நன்றாக படிப்பார்கள். எங்கள் பணிகளை சிறப்பாக செய்ய முடியும். |
| மேலாளர் | : | நிச்சயமாக..... |



# பிரதமர் மக்கள்-நிதி திட்டம்

## எனது வங்கி கணக்கு, எனது வாழ்க்கை கணக்கு

**நான் ஏன் ஒரு அடிப்படை சேமிப்பு வங்கி கணக்கு திறக்க வேண்டும்?**

- வங்கியில் சேமிக்கப்படும் பணம் பாதுகாப்பாக இருக்கும்.
- நீங்கள் வங்கியில் சேமிக்கப்படும் பணத்திற்கு வட்டி கிடைக்கும்.
- நீங்கள் எப்போதும், எங்கு வேண்டுமானாலும் அவசர தேவைகளுக்கு வங்கி கணக்கிலிருந்து பணம் எடுத்துக் கொள்ளலாம்.
- நீங்கள் ஒரு வங்கி கணக்கு திறந்த பிறகு கடன் மற்றும் வைப்பு நிதி போன்ற சேவைகளை வங்கியிலிருந்து பெற முடியும்.

[

**ஒரு அடிப்படை சேமிப்பு வங்கி கணக்கின் நன்மைகள் என்ன?**

அடிப்படை சேமிப்பு வங்கி கணக்கிற்கு குறைந்த பட்ச நிலுவைத் தொகை எதுவும் தேவை இல்லை ஆகவே கணக்கு தொடங்குவதற்கு ஆரம்ப கால தொகை செலுத்த தேவையில்லை. பணத்தை எப்போது வேண்டுமானாலும் தேவைப்படும் போதெல்லாம் வங்கி கணக்கில் போடவோ எடுக்கவோ செய்யலாம்.

**எப்படி நான் என்னுடைய ஏடிஎம் / டெபிட் (RuPay) அட்டை பயன்படுத்த முடியும்?**

ஒரு ஏடிஎம் / டெபிட் (RuPay) அட்டை கணக்கு தொடங்கும் சமயத்தில் வழங்கப்படும். நீங்கள் விரும்பும் போது இந்த அட்டையை உபயோகித்து எந்த வங்கி ஏடிஎம் லும் 24 X 7 நாட்களிலும் எடுத்துக் கொள்ளலாம். உங்கள் கையில் ஏடிஎம் இருப்பதால் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் பணம் எடுத்துக்கொள்ளலாம். நீங்கள் இந்த அட்டை பயன்படுத்தி வணிக நிறுவனங்கள் / கடைகளில் பொருட்கள் அல்லது சேவைகள் பெறமுடியும். மேலும், இந்த அட்டைக்கு ரூ 1.00 லட்சம் மதிப்பிலான உள்ளடிக்கிய விபத்து காப்பீடு உள்ளது.

**இந்த கணக்கில் ஏனைய வசதிகள் யாவை?**

தாங்கள் கணக்கில் திருப்தியான வரவு செலவு 6 மாதங்கள் செய்திருந்தால் வங்கியானது முதலில் ரூபாய் 1000 வரை மிகைப்பற்று வழங்க பரிசீலனை செய்யப்படும். மிகைப்பற்றுக்கான வட்டியை ஒழுங்காகக் கட்டும் பட்சத்தில் வங்கியானது மிகைப்பற்றுக்கடனை ரூபாய் 5000 வரை உயர்த்த வாய்ப்புள்ளது.

**நான் ஒரு கணக்கு தொடங்கிய பிறகு என்னென்ன சேவைகளைப் பெற முடியும்?**

- நிலையான மற்றும் தொடர் வைப்பு நிதி
- கிஸான் கடன் அட்டை
- பயிர் கடன்கள், டிராக்டர் கடன்கள் மற்றும் மற்ற விவசாய உபகரணங்கள் கடன்கள்.
- பணம் அனுப்பும் வசதி

**நான் என் வங்கி சேமிப்பு கணக்கில் என்னுடைய ஆதார் எண்ணை இணைக்க முடியுமா?**

ஆம், ஆதார் எண்ணை உங்கள் சேமிப்பு கணக்கில் இணைக்க முடியும். மற்றும் ஆதார் அடிப்படையில் பெறப்படும் மானியங்களான, சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் (SSP), சமையல் எரி வாயு (LPG) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டம் (MGNREGA) நேரடியாக இந்த கணக்கில் வரவு வைக்கப்படும். அரசு மானியத்தை பெற ஆதார் எண்ணை வங்கியிலும் மற்றும் குறிப்பிட்ட அரசுத் துறையிலும் கட்டாயம் கொடுக்க வேண்டும்.

**கணக்குத் துவங்க தேவையான ஆவணங்கள் எவை?**

சேமிப்பு கணக்கு துவங்குவது மிகவும் எளிதானது ஆகும். தாங்கள் அடையாள சான்று மற்றும் முகவரி சான்று சமர்ப்பித்து, குறிப்பாக ஓட்டுனர் உரிமம்,பாஸ் போர்ட், தொலைபேசி ரசீது, மின் கட்டண ரசீது மற்றும் வாக்காளர் அடையாள அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்ட அட்டை, ஆதார் எண் அட்டை அல்லது பஞ்சாயத்து தலைவரால் வழங்கப்படும் சான்று மூலம் நீங்கள் சேமிப்பு கணக்கு தொடங்கலாம்.

**மாநில வங்கியாளர்கள் குழுமம், தமிழ்நாடு**

**(ஒருங்கிணைப்பாளர்: இந்தியன் ஓவர்சீஸ் வங்கி)**